3047/ES.2/2016

I/3000/2024

சிறைத்துறைத் துணைத் தலைவர்(தலைமையிடம்) அவர்களின் செயல்முறை ஆணைகள், சென்னை-8
முன்னிலை - **திரு. இரா. கனகராஜ்., எம்.ஏ.,எம்.ஃபில்.,**

19-03-2024

பொருள்- சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட சி.அசோக்குமார் என்பவரது பணியினை வரன்முறை செய்வது, அசல் ஆவணங்களை பெற்றுக் கொண்டமைக்கு அரசுக்கு ஒப்புதல் மற்றும் அசல் ஆவணங்களை சார்பு செய்வது - தொடர்பாக.

பார்வை
1 இவ்வலுவலக கடித எண்.3047/இஎஸ்.2/2016, நாள்.16.05.2022.
2 இவ்வலுவலக கடித எண். 3047/இஎஸ்.2/2016, நாள்.25.08.2022.
3 அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1) துறை, நாள்.08.03.2023.
4 அரசு கடித எண்.e7897/சிறை.2/2022-1, உள் (சிறை.2) துறை, நாள்.02.01.2024.

******

பார்வை 1ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி சி.அசோக்குமார் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை தலைமை அலுவலகத்தில் 16.05.2022 முற்பகல் பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

2) சி.அசோக்குமார், தற்காலிக இளநிலை உதவியாளர் என்பவர் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, விதி எண்.15ல் குறிப்பிடப்பட்டவாறு இவர் பணிநியமன நாளில், இளநிலை உதவியாளர் பதவிக்கான வயது மற்றும் கல்வி தகுதிகள் பெற்றுள்ளார். இவரது பணிநியமனத்திற்கு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படவில்லை. எனவே, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட சி.அசோக்குமார் என்பவர் பணியில் சேர்ந்த நாளான 16.05.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

3) தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகள் விதி எண்.32ன்படி இவர் பணி நியமன நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

Signed by
Kanagaraj R
Date: 19-03-2024 17:06:44

R KANAGARAJ
INSPECTOR GENERAL OF PRISONS
(HEADQUARTERS)_HO_TNPCS
19-03-2024

பெறுநர்
சி.அசோக்குமார், இளநிலை உதவியாளர், தலைமை அலுவலகம், சென்னை-8.
நகல் - சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், (கிழக்கு) சென்னை-8.
நகல் - இடபிள்யு.2, உதவியாளர், தலைமை அலுவலகம், சென்னை-8.